
**பாடம் 9** **மே 23-29**



# பாவம், சுவிசேஷம், கட்டளைகள்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** ெநியா 14; மாற்கு 9:42–48; ரோமர் 3:20; மத் 5:17,18; ரோமர் 3:28; மத் 7:24–29.

**மனன வசனம்:** நான் ஒருபோதும் உம்முடைய கட்டளைகளை மறக்கமாட்டேன்; அவைகளால் நீர் என்னை உயிர்ப்பித்தீர். நான் உம்முடையவன், என்னை இரட்சியும்; உம்முடைய கட்டளைகளை ஆராய்கிறேன். சங் 119:93,94.

தேவனோடு நெருக்கமான உறவு வைப்பதற்கு பாவம் மிகப்பெரிய தடையாக இருப்பதில் கொஞ்சமும் சந்தேகமில்லை. பாவம் இங்கு நம்மை தேவனிடமிருந்து பிரிக்கிறது, அதுமட்டுமல்ல, அது நம்மை வஞ்சித்து, சிதைத்து, பட்சித்து, இறுதியில் அழிக்கிறது. பாவத்திற்கும் சுயத்திற்கும் எதிரான நம் போராட்டம்தான் நாம் எதிர்கொள்வதிலேயே மிகப்பெரிய போராட்டமாக இருக்கும்; இது மிகப் பெரிய, ஏன் நித்தியமான விளைவுகளையும் கொண்டது. ஏசா 59:2.

பாவத்தை வாழ்க்கையின் இயல்பான பகுதி, இன்பமாக வாழ நினைப்பது மனித இயல்புதான் என்று சிலர் அலட்சியம் காட்டுகிறார்கள். பாவம் இன்று சமுதாயத்தில் சகஜமான ஒன்றாக மாறிவிட்டதால், அதை நாம் பெரிதாக எடுத்துக்கொள்வதில்லை. பாவத்தைப் பாவம் என்று சொல்லிவிட்டால், யாராவது புண்பட்டுவிடுவார்களோ என்று பயந்து, அதுபற்றி அதிகமாகப் பேசுவதில்லை; ஆனால் முடிவில், பாவம் எவ்வளவுக்கு நமக்கு சௌகரியமாகிறதோ அவ்வளவுக்கு தேவனோடான ஆரோக்கியமான உறவிலிருந்து விலகிச்செல்வோம்.

ஆம், எல்லாருமே பாவம் செய்திருக்கிறார்கள், நம் எண்ணங்களும் நோக்கங்களும் செயல்களும் வார்த்தைகளும் தேவனையும், மற்றவர்களையும், நம்மையும் புண்படுத்துகின்றன. இறுதியில் பாவம் தேவனோடு உள்ள நம் உறவை அழிக்கிறது; ஆனால் நம் பாவத்தை வெளிச்சப்படுத்திக் காட்டுகிற கற்பனைகள்மூலம் தேவன் தம்மை வெளிப்படுத்தியிருக்கிறார்.

தேவன் தம் கற்பனைகளைக் கொடுத்திருப்பதற்கான காரணத்தையும், ஒருவர் தேவனுடைய கற்பனைகளை மீறி, அதன்விளைவாகப் பாவம் செய்யும்போது தேவனோடான அவர்களது உறவை யார் அல்லது எப்படி மீண்டும் சரிசெய்யமுடியும் என்பதையும் இந்த வாரம் ஆராய்வோம்.

*2025, மே 30 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# கவனச்சிதறல்களும் சோதனைகளும்

**சிம்சோனின் பாவத்தூண்டல்களை வாசியுங்கள். நியா 14; 16:1,4,16,17. சிம்சோனை தேவன் ஒரு விசேஷித்த நோக்கத்திற்காக அழைத்தார், ஆனால் சிம்சோன் பாவத் தூண்டலுக்கு இணங்கிக்கொண்டே தேவனுக்குச் சேவைசெய்தார். அவரது வாழ்க் கையின் முடிவு என்ன போதிக்கிறது?**

பரலோகத்தில் துவங்கின மாபெரும் போராட்டம் போராட்டம், இப்போது நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் நடைபெற்று வருகிறது.

நாம் தேவனோடு நெருக்கமான உறவுகொள்வதைத் தடுப்பதற்காக, சாத் தான் தன்னிடம் உள்ள அனைத்து வழிகளையும் பிரயோகிக்கிறான். ஒரு வேளை, உங்கள் கவனத்தைத் திசைதிருப்புகிற சில விஷயங்கள் அடிப்படையில் தவறில்லாதவையாக இருக்கலாம், ஆனால் அவை உங்களுடைய அதிக நேரத் தையும் ஆற்றலையும் எடுத்துக்கொள்வதால் தேவனுக்காக ஒதுக்க உங்களிடம் மிகக்குறைந்த நேரமே மிஞ்சும். அது வேலையாக, சமூக ஊடகங்களாக, பொருள் வாங்குவதாக, விளையாட்டாக அல்லது உணவாக இருக்கலாம். எதையும் அதிக மாகப் பயன்படுத்துவதும் சமநிலையற்ற போக்கும், தேவனுக்காகவும் பிறருக் காகவும் நாம் செலவிடும் நேரத்தைக் குறைத்துவிடுவதை உணரலாம். நமது பலவீனங்கள் ஒவ்வொன்றையும், தேவனோடு நேரம் செலவிடுவதிலிருந்து நம்மைத் திசைதிருப்பக்கூடிய விஷயங்கள் எவை என்பதையும் எதிரியானவன் நன்கு அறிந்து வைத்திருக்கிறான். எனவே, நம் அன்றாட வேலைகளுக்குள் அவசரமாக ஓடுவதற்கும், நம் வழியில் வரக்கூடிய அனைத்தையும் எதிர்கொள் வதற்கும் முன்பாக, முதலாவது தேவனைத் தேடுவதற்கு நாம் பழகவேண்டும்.

இயேசு நம் பலவீன நிலையைப் புரிந்துகொள்கிறார், ஆனால் நம் மெத் தனப் போக்கைக் கண்டிக்கிறார். வெளி 3:14-22. அவர் தேவனாக இருந்தாலும், நம்மைப்போலச் சோதிக்கப்பட்ட ஒரு மனிதனாகவும் இருந்தார். யோவான் 4:6. நம்மைப்போல அவருக்கும் வாழ்க்கையின் அழுத்தங்கள் தெரியும், ஆனால், அவர் தம் பிதாவிடம் ஜெபிப்பதற்காகத் தனியாகச் சென்று, அடிக்கடி அதிலிருந்து விடுதலைபெற்றார். லூக் 5:16; 6:12; மாற்கு 1:35; மத் 14:23. சோதனைகளை எதிர்த்துப் போராடுவதற்கான பலத்தை மீண்டும் பெறுவதற்கு, தமது பிதாவோடு நேரத்தைச் செலவிடுவதே தாம் செய்யக்கூடிய மிகச்சிறந்த வழி என்பதை அறிந் திருந்தார். நமக்கும்கூட இதுவே மிகச்சிறந்த மற்றும் உறுதியான வழியாகும்.

சிம்சோன் தன்னைப் பலசாலி என்று நினைத்ததாலேயே வீழ்ந்தான். சோத னைகளை வெல்வதற்குத் தன் சொந்த பலத்தையே நம்பினான். ஆத்துமாக்களின் எதிரியானவன், தேவனோடுள்ள நமது உறவை வலுவிழக்கச் செய்து அழிக்க முயற்சிப்பதால், நாம் ஒவ்வொருவரும் தினமும் பாவத்துடனான போராட்டங் களை எதிர்கொள்கிறோம். அவன் நமது பலவீனங்களை அறிந்து, அவற்றைக் குறிவைக்கிறான்; இதன்மூலம் தேவனோடுள்ள நமது உறவை மழுங்கடிக்கவும், நமக்குள் குற்ற உணர்வையும் தகுதியற்றவன் என்கிற எண்ணத்தையும் ஏற்படுத் தவும் முயல்கிறான். இவையனைத்தும் நம்மை, தேவனுடமிருந்து வெகுதூரம் விலக்கிச் செல்லக்கூடியவை. நமது வாழ்க்கையின் ஏதாவது ஒரு பகுதியில் தன் ஆதிக்கத்தைச் செலுத்த, நமது சிந்தனை, நோக்கம் மற்றும் செயல்களை மாற்றியமைக்க பிசாசு வேலை செய்கிறான். ஆனால் நினைவில் கொள்ளுங்கள்: நமது விசுவாசம் நாம் நிலைத்து நிற்க உதவும், அந்த விசுவாசம் தேவனுடைய வார்த்தையைக் கேட்பதினால் வரும்.

இப்போது எதனுடன் போராடி வருகிறீர்கள்? தற்சமயம் தேவ வார்த்தை உங்களுக்கு எவ்வாறு உதவமுடியும்?

# தேவனோடுள்ள என் உறவில் தடைகள்

தேவனோடு நம் உறவையும், கிறிஸ்துவுக்குள் நாம் வளருவதைத் தடுக்கிற தடைகளையும்பற்றின செய்திகள் வேதாகமத்தில் பல உள்ளன. பவுல் மற்றும் இயேசுவின் இந்த வார்த்தைகளைக் கவனியுங்கள்:

**'இப்படியிருக்க, தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்' 1கொரி 10:12.** சிம்சோனுக்கு நிகழ்ந்ததுபோல, சுயசார்பு நம்மை வீழ்த்திவிடும்.

**'மனுஷரால் புகழப்படுவதற்கு, மாயக்காரர் ... செய்வதுபோல, உனக்கு முன்பாகத் தாரை ஊதுவியாதே' மத் 6:2.** நீங்கள் எவ்வளவு நல்லவர் என்பதை மற்றவர்களிடம் விளம்பரப்படுத்துவதை நிறுத்துங்கள்! இயேசுவைப்போல, தாழ்மையாக இருங்கள்.

**'நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ்செய்தாயிற்று. உன் வலது கண் உனக்கு இடறலுண்டாக்கினால், அதைப் பிடுங்கி எறிந்துபோடு' மத் 5:28,29.** உங்கள் இருதயத்திலுள்ள இச்சையைப் பிடுங்கி எறிந்துபோட என்னவேண்டுமானாலும் செய்யுங்கள், ஏனென்றால் இது தேவனோடு உங்கள் உறவுக்கு ஒரு தடையாக இருக்கிறது.

**'நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள். ஏனெனில், நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள்' மத் 7:1,2.** மற்றவர்களை விமர்சிப்பதையும் நியாயந்தீர்ப்பதையும் நிறுத்துங்கள். தேவனே நியாயாதிபதி, அவரே நியாயந்தீர்க்கட்டும். 1கொரி 4:5.

**'நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணுங்கள்' மத் 5:44.** உங்கள் எதிரிகளை வெறுப்பதை நிறுத்திவிடுங்கள். உங்களை மோசமாக நடத்தினவர்கள்குறித்து எதிர்மறையான எண்ணம் உண்டாகும்போது, தேவனோடு உள்ள உங்கள் உறவில் உடனடியாக ஒரு தடை ஏற்பட்டுவிடுகிறது. மாறாக, உங்கள் எதிரிகளுக்காக ஜெபிக்கத் துவங்குங்கள், அது தேவனோடுள்ள உங்கள் உறவில் மட்டுமல்ல, மற்றவர்களுடனான உங்கள் உறவிலும் மாற்றங்களை உண்டாக்கும்.

**'நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக்கொள்பவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்' மத் 5:22.** உங்களுக்கு நெருக்கமானவர்கள்மீது நீங்கள் கோபமாக இருப்பதற்கு நியாயமான காரணங்கள் இருக்கலாம். ஆனால் உங்கள் கோபம் தேவனோடு உள்ள உங்கள் உறவை எப்படிப் பாதிக்கிறது? அதுமட்டுமல்லாமல், நீங்கள் யார் மீது கோபப்படுகிறீர்களோ அவர்களுடனான உறவையும் அது எப்படிச் சிதைக்கிறது? நாம் தடுமாறி விழுவதற்கு இவையெல்லாம் சில முக்கியக் காரணங்களாகும்.

**நம் கைகளும், கால்களும், கண்களும் நம்மை பாவம் செய்ய வைத்தால், நாம் என்ன செய்யவேண்டும் என்று இயேசு எச்சரித்தார். அந்த எச்சரிப்பின் அர்த்தம் என்ன? மாற்கு 9:42-48.**

பாவம் செய்யத் தூண்டுகிற கையை அல்லது காலை வெட்டி எறிவதும், கண்ணைப் பிடுங்கிப் போடுவதும் மிகக்கடுமையான செயல்களாகத் தோன்றலாம். அது உண்மைதான். பாவத்தையும், அது நம் வாழ்வில் ஏற்படுத்தும் தாக்கத்தையும் இயேசு அவ்வளவு தீவிரமாகப் பார்த்தார் என்பதையே இது காட்டுகிறது. நீங்கள் அதை எவ்வளவு தீவிரமாக எடுத்துக்கொள்கிறீர்கள்?

# நியாயப்பிரமாணம்

**கிறிஸ்தவரல்லாத ஒருவருக்குப் பாவத்தை எவ்வாறு விளக்குவீர்கள், விவரிப்பீர்கள்? பாவத்தை வேதாகமம் எவ்வாறு விவரிக்கிறது? ரோமர் 3:20; 1யோவான் 3:4.**

தேவனுடைய நியாயப்பிரமாணத்தை மீறுவதே பாவம். 1யோவான் 3:4. பாவம் நம் இயல்பிலேயே புதைந்திருக்கிறது. சங் 51:5; எரே 17:9. எனவே, பாவம் என்னவென்பதை நியாயப்பிரமாணம்தான் வெளிச்சப்படுத்திக் காட்டுகிறது. நம்மைச் சுற்றிலும் இருப்பதைத் தெளிவாகப் பார்க்க உதவுகிற கண் கண்ணாடிபோல அல்லது நம் உண்மையான தோற்றத்தைப் பார்க்க உதவுகிற முகக் கண்ணாடி போல நியாயப்பிரமாணம் இருக்கிறது. இது நமது வாழ்க்கை, நமது குணாதிசயங்கள்பற்றிய தெளிவையும், நாம் மாறவேண்டிய அவசியத்தையும் உணர்த்துகிறது; அதேநேரத்தில், தேவனுடைய குணம் என்ன என்பதையும் அவருக்கு எது முக்கியம் என்பதையும் நமக்கு எடுத்துரைக்கிறது.

பத்துக்கற்பனைகளை, தேவன் தம் விரல்களாலே எழுதினார். யாத் 20:3-17. அவற்றின் முக்கியத்துவத்தை இயேசு வலியுறுத்தினார்: 'உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக'. இது முதலாவது கற்பனை. இரண்டாவது கற்பனை இவ்வாறு உள்ளது: 'உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோல் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே; இவைகளிலும் பெரிய கற்பனை வேறொன்றுமில்லை' மாற்கு 12:30,31. மேலும் சொன்னார்: 'இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப்பிரமாணம் முழுமையும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிறது'. மத் 22:40.

நியாயப்பிரமாணம் முற்றிலும் உறவுகள் சம்பந்தப்பட்டது என்பதையே சீனாய் மலையில் இஸ்ரவேலர்களுக்கும், இன்று நமக்கும் தேவன் பேசின வார்த்தைகள் சொல்கின்றன. எபி 1:1,2. தேவனோடும் மற்றவர்களோடும் நம் உறவைப் பாதுகாக்கிற ஒரு கவசமாக தேவன் நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தார். ஆனாலும், சிலருக்கு, தேவனுடைய பிரமாணம் பாரமாகத் தெரியும்படிக்கு, அதன் அழகைச் சாத்தான் சிதைத்துவிட்டான். நியாயப்பிரமாணம் கிரியைத்துவம் சம்பந்தப்பட்டது அல்ல, அது அன்பும் விடுதலையும் சம்பந்தப்பட்டது. வேதாகமம்கூட இவ்வாறு சொல்கிறது: 'நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்புகூருவதாம்; அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல'. 1யோவான் 5:3.

1. **ஜீவனுள்ள தேவவார்த்தையும் தேவ கட்டளைகளும் உங்களுக்கு எவ்வளவு விலையேறப்பெற்றதாக இருக்கிறது?**
2. **நான் தேவனுடைய கற்பனைகளைக் கடைப்பிடிக்கும்போது, அது என்னைக் கட்டுப்படுத்துகிறதா அல்லது என்னைப் பெலப்படுத்துகிறதா? ஒருவேளை அது என்னைக் கட்டுப்படுத்துவதாக நான் நினைத்தால், அந்தக் கற்பனையை நான் இன்னும் சிறப்பாக எவ்வாறு புரிந்துகொள்ளலாம்?**
3. **தேவன்மீதும், மற்றவர்கள்மீதும் அன்பு செலுத்தவேண்டும் என்கிற தேவகட்டளையை, என் வாழ்விலும், என் குடும்பத்திலும் என் சபையிலும் மையமாக்கினால் என்ன நடக்கும்? அதன் விளைவாக என் வாழ்க்கையிலும் என் உறவுகளிலும் என்னென்ன மாற்றங்கள் ஏற்படும்?**

# நியாயப்பிரமாணமும் சுவிசேஷமும்

நியாயப்பிரமாணத்திற்கும் தமக்கும் உள்ள உறவு என்ன என்பதை இயேசுவே மிகவும் வல்லமையாகவும் சுருக்கமாகவும் விளக்கினார்.

**மத் 5:17,18இல் நியாயப்பிரமாணம்பற்றி இயேசு என்ன சொன்னார்?**

---

பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு விதிக்கிற கட்டுப்பாடுகள், அவர்கள் எதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் என்பதை வெளிப்படுத்துகின்றன; அதுபோல, தேவனுடைய பிரமாணமானது, அவரது குணாதிசயத்தையும் அவருக்கு எது முக்கியம் என்பதையும் தெரிவிக்கிறது. நாம் தேவனோடு வளரும்போது, அவரது கட்டளைகள் நம் வாழ்வின் ஒவ்வொரு அம்சத்தையும் வழிநடத்தும் என்பதை அறிந்து, அவரோடும் மற்றவர்களோடும் நாம் கொண்டுள்ள உறவைப் பாதுகாக்கவே தேவன் தம் பிரமாணத்தைக் கொடுத்தார். இறுதியில், தேவனுடைய பிரமாணத்தை மீறுகிற செயலான பாவத்தினால் ஏற்படும் கொடிய விளைவுகளினால் நம்மில் பாதிக்கப்படாதவர் யாராவது இருக்கமுடியுமா?

இயேசுவின்மீதான அன்புதான் நியாயப்பிரமாணத்தின் மையமாக இருக்கிறது. 'நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்' என்று இயேசு சொன்னார். யோவான் 14:15. நாம் இயேசுவை உண்மையாகவே நேசிக்கும்போது, இயல்பாகவே அவரது கற்பனைகளைக் கைக்கொள்ளத் தூண்டப்படுவோம். அவரது பிரமாணத்தை தெளிவாகப் பார்க்கும்போது, இயேசுவை அதிகமாக நேசிக்கத் தூண்டப்படுவோம். மேலும் முக்கியமாக, சிலுவையையும், இயேசு நமக்காக மரித்த காட்சியையும் எப்போதும் நம் கண்முன் வைத்திருப்பதுதான், தேவன்மீதான நம் அன்பை வளர்ப்பதற்கான சிறந்த வழியாகும்.

அதனால்தான் சுவிசேஷமும் பிரமாணமும் இணைந்தே செல்கின்றன. அதாவது, நாம் தேவனுடைய பிரமாணத்தின்மீதும், அதைக் கடைப்பிடிப்பதன் முக்கியத்துவத்தின்மீதும் எவ்வளவுதான் நம்பிக்கைக் கொண்டிருந்தாலும், தேவனுக்கு முன்பாக நமது சட்டபூர்வமான நிலையைப் பொறுத்தவரை, அந்தப் பிரமாணம் நம்மைக் குற்றவாளிகளாகமட்டுமே தீர்க்கும் என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ளவேண்டும். நியாயப்பிரமாணம் ஒருபோதும் மன்னிப்பதில்லை, ஒருபோதும் நீதிமானாக்குவதில்லை, ஒருபோதும் பாவநிவாரணம் செய்வதில்லை. மாறாக, நாம் மன்னிக்கப்படவேண்டிய, நீதிமானாக்கப்படவேண்டிய, பாவநிவாரணம் செய்யப்படவேண்டிய அவசியத்தை நமக்குச் சுட்டிக்காட்டுகிறது. இங்குதான் சுவிசேஷம் அவசியமாகிறது. அதாவது, நியாயப்பிரமாணத்தை நாம் புரிந்துகொள்ள சுவிசேஷம் அடிப்படையாக இருக்கிறது; நமக்காகக் கிறிஸ்து மரித்தார் என்கிற சுவிசேஷம் நியாயப்பிரமாணத்தால் ஒருபோதும் செய்யமுடியாததைச் செய்கிறது: அதாவது, தேவனுக்குமுன்பாக நம்மை நீதிமான்களாக்குகிறது.

---

**ரோமர் 3:28; 4:13–16; கலா 2:16; 3:13; பிலி 3:9. விசுவாசிகளாகிய நாம் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்கிற அதே வேளையில், கிரியைத்துவக்காரர்களாக மாறாமல் இருப்பதற்கு எவ்வாறு இந்த வசனங்கள் உதவுகின்றன?**

# அறிதலும் செய்தலும்

மலைப்பிரசங்கத்தில், இயேசு கிறிஸ்து தேவனோடும் மற்றவர்களோடும் நாம் வைத்திருக்கவேண்டிய உறவுகளைப்பற்றிய ஆழமான உண்மைகளைப் போதித்தார். இறுதியில் ஆழமான ஒரு உண்மையைச் சொன்னார்:

'*பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கிக் கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை' மத் 7:21.*

அவரைத் தெளிவாக அறிந்து, அவரைநோக்கிக் கூப்பிடுகிற சிலர்கூட அவரை உண்மையில் அறிந்திருக்காமல் இருக்கலாம். அறிதல் மிகவும் முக்கியம்தான்; உண்மையில் தேவனைப்பற்றிய அறிவு இல்லாததால், அவரை அறிகிற அறிவைப் புறக்கணிப்பதால் தேவ ஜனங்கள் அழிக்கப்படக்கூடும் என்று வேதாகமம் சொல்கிறது. ஓசியா 4:1,6,10. காலத்தால் அழியாத வேதாகமச் சத்தியங்களின் முக்கியத்துவத்தை நாம் ஒருபோதும் குறைத்து மதிப்பிடக்கூடாது. அத்தகைய அறிவு நம்மை மாற்றவேண்டும், நம் அர்ப்பணிப்பையும் தேவனோடு உள்ள அனுபவத்தையும் ஆழமாக்கவேண்டும், இல்லையென்றால் பயனில்லை.

'ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்' யோவான் 17:3. தேவசித்தத்தின்படி நடப்பதும், அவரை அறிவதுமே பரலோகத்திற்குச் செல்வதற்கான முன்நிபந்தனை; ஏனென்றால், அவரை அறியாமல் அவருடைய சித்தத்தை நாம் செய்ய முடியாது. இதுவே தீர்மானிக்கக்கூடிய காரணி மற்றும் மிகவும் நியாயமான எதிர்பார்ப்பும் ஆகும். உங்களை நேசிப்பதாகச் சொல்கிற உங்கள் பிள்ளைகள், நீங்கள் கேட்பதைச் செய்தால்தான், அந்தச் செயல்கள் உங்கள்மீது அவர்கள் வைத்துள்ள அன்பு, மரியாதையின் ஆழத்தை வெளிப்படுத்துகின்றன. அதேபோல, நாம் தேவனை நேசிக்கும்போது, அவருடைய சித்தத்தைச் செய்யவே விரும்புவோம்; ஏனெனில், அதைவிடச் சிறந்த ஒன்று நமக்கு வேறு எதுவுமில்லை! அவருக்கு நாம் காட்டுகிற பிரதிவினையும், இறுதியாக, நம் அன்பின் வெளிப்பாடாக அவருக்கு நாம் காட்டுகிற கீழ்ப்படிதலும்தான் அவரோடு நமக்கு இருக்கும் உறவின் உண்மையான தன்மையைக் காட்டுகின்றன.

**மலைப்பிரசங்கத்தின் இறுதியில், கேட்டுக்கொண்டிருந்தவர்களுக்கு மிகவும் ஆழமான இறுதிச் சவாலை விடுத்து இயேசு போதனையை நிறைவு செய்கிறார். அது என்ன? மத் 7:24-29.**

இயேசுவின் செய்திகளை உண்மையாகவே கேட்கும்போது, அது நமக்குச் சவால்விட்டு, நம்மை மாற்றும். ஆனால், எல்லாவற்றிற்கும் மேலாக, நம்முடைய காதுகள் திறந்திருக்கவேண்டும், நம் இதயங்கள் ஏற்றுக்கொள்ளும் நிலையில் இருக்கவேண்டும்; அப்போதுதான், தேவனோடு ஒரு நெருக்கமான உறவில் வாழ்வதற்கான வாழ்க்கை வரைபடம், நாம் சுவாசிக்கும் ஒவ்வொரு மூச்சிலும் நம் ஆத்துமாவில் ஆழமாகப் பதிக்கப்படும். கன்மலையாகிய அவர் மீதும், அவர் நமக்கு வைத்திருக்கிற பூரணத் திட்டத்தின்மீதும் நமது வாழ்க்கை கட்டப்படும்.

நெருக்கமான உறவுக்கான வரைபடம் இரகசியமானது அல்ல. ஆவியின் ஏவுதலால் எழுதப்பட்ட தேவ வார்த்தையில் அது வெளிப்படுத்தப்பட்டுள்ளது, அதை அவர் ஒவ்வொரு நபருக்கும் கொடுக்கிறார். அதை விசுவாசத்தால் ஏற்றுக்கொள்வதும், கிறிஸ்துவின் பூரண நீதியைப் பற்றிக்கொள்வதும், அந்த நீதியின்படி வாழ்வதும் அவரவரது தனிப்பட்ட தீர்மானமாகும்.

# மேலும் படிக்க:

தேவனுடைய கற்பனைகளுக்கு எதிராகவே சாத்தான் மிகப்பெரிய சவாலைத் தொடுத்ததால், 'நியாயப்பிரமாணம்' அதிகமாகத் திரிக்கப்பட்டிருப்பதற்கும், தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டிருப்பதற்கும் நாம் ஆச்சரியப்படத் தேவையில்லை. இயேசு நியாயப்பிரமாணத்தையும் தேவனுடைய அற்புதமான குணத்தையும் வெளிச்சப்படுத்தினார்; அவர் நியாயப் பிரமாணத்தை நிறைவேற்ற, தேவன் எப்படிப்பட்டவர் என்பதைக் காட்ட வந்தார். மத் **5:17,18.**

'இஸ்ரவேலர் தேவனுடைய பிரமாணத்தின்மேல் கொண்டிருந்த பற்றுதான், தாவீதின் ஆட்சியிலும் சாலொமோனுடைய ஆட்சியின் ஆரம்பநாட்களிலும் அவர்களைப் பெலப்படுத்தியது; ஜீவவார்த்தையிலிருந்த விசுவாசத்தின் மூலமாகத்தான் யோசியா மற்றும் எலியாவின் நாட்களில் சீர்திருத்தம் நடைபெற்றது. இஸ்ரவேலின் பொக்கிஷமாயிருந்த வேதவாக்கிய சத்தியத்தை முன்வைத்தே சீர்திருத்தத்திற்கு ஏதுவாக மக்களிடம் எரேமியா வேண்டிக் கொண்டார். எரே **11:2**'.

---

### கலந்துரையாடக் கேள்விகள்

**1** *இன்று பொதுவாக மக்கள் பாவத்தை எவ்வாறு பார்க்கிறார்கள்? நம் சபையின் பிரதிவினை என்னவாக இருக்கவேண்டும்?*

**2** *பாவம் தேவனுடனும் பிறருடனும் உள்ள உறவுகளைச் சிதைப்பதை நீங்கள் எப்போது நேரில் கண்டிருக்கிறீர்கள்?*

**3** *தேவனுடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிவது உங்கள் வாழ்க்கையில் எளிதாக இருந்திருக்கிறதா அல்லது கடினமாக இருந்திருக்கிறதா? அதற்கான காரணிகள் என்ன?*

**3** *செவந்த்-டே அட்வென்டிஸ்ட் என்கிற பெயரே கற்பனைகளில் நமக்கு அதிக அக்கறை இருப்பதைக் காட்டுகிறது; கற்பனைகளைக் கைக்கொள்வதால் இரட்சிக்கப்படமுடியும் என்கிற கிரியைத்துவக் கண்ணியிலிருந்து நாம் எவ்வாறு தப்பிக்கலாம்? மனதில் ஒரு பரிசோதனை செய்து பாருங்கள்: இறுதித் தீர்ப்பு நாளில், உங்கள் ஒவ்வொரு பாவமும் பரிசுத்தமான, பூரணமான தேவனுக்குமுன் தீர்ப்புக்காகக் கொண்டு வரப்படும்போது, நீங்கள் எதைச் சார்ந்திருக்கப் போகிறீர்கள்? கற்பனைகளை நீங்கள் கடைப்பிடிப்பதையா? அல்லது உங்களுக்குப் பதிலாக இயேசு கிறிஸ்து பெற்றுத்தந்த முழுமையான நீதியையா?*

**1** *அறிவைப்பெற்றிருப்பது (அல்லது அறிவில்லாமல் இருப்பது) தேவனோடுள்ள உறவில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்? நீதி 24:3,13,14.*

**பாடச்சுருக்கம்:** நம் வாழ்க்கை பாவத்தால் கறைபட்டுள்ளது, அது தேவனிடமிருந்து நம்மைப் பிரிக்கிறது. ஆனாலும் நாம் முழு மனதோடும், இருதயத்தோடும், ஆத்துமாவோடும், பெலத்தோடும் தம்மை அறியவும், அன்புகூரவும் தேவன் நம்மை அழைக்கிறார். அப்போது, மற்றவர்கள்மீது அதிக அன்புள்ளவர்களாக மாறுவோம். தேவன்மீதும், மற்றவர்கள்மீதும் அப்படிப்பட்ட அன்பைக் காட்ட கற்பனைகள் சொல்கின்றன, தேவனோடும் மற்றவர்களோடும் நம் உறவுகளைப் பாதுகாத்து, பத்திரப்படுத்தக் கொடுக்கப்பட்டுள்ளன. தேவ கற்பனைகள் அவரது குணத்தின் அற்புதமான பிரதிபலிப்புகள், அவரது பிரமாணத்தை நாம் புரிந்து கொள்ளும்போது, அவருடனான நம் உறவு வலுவாக மாறும்.

# பிரேசிலில் அற்புதமாகக் கிடைத்த பணம்

19 வயது மாணவரான தார்சிஸ் கோம்ஸ், தனது தந்தையிடமிருந்து மாதம் 50 பிரேசிலிய ரியால் (அப்போது அதன் மதிப்பு 50 அமெரிக்க டாலர்) உதவித்தொகையாகப் பெற்று வந்தார். அதில் 5 ரியால் தசமபாகமாகவும், 5 ரியால் காணிக்கையாகவும் கொடுத்த பிறகு, அவரிடம் பல்கலைக்கழகச் செலவுகளுக்காக 40 ரியால் மீதமிருக்கும். ஒரு ஓய்வுநாளில், ஆலயத்தில் தசமபாகம் மற்றும் காணிக்கை கொடுத்த பிறகு, நிவால்டோ என்ற நண்பர் தனது சக்கர நாற்காலிக்கு புதிய டயர்கள் வாங்க தார்சிஸிடம் உதவி கேட்டார். தார்சிஸ் தயங்கவில்லை. "கண்டிப்பாக உனக்கு இருபது ரியால் தருகிறேன்" என்று கூறினார்.

பின்னர் ஜெய்ரோ என்ற மற்றொரு நண்பரும் உதவி கேட்டார். "கண்டிப்பாக உனக்கு இருபது ரியால் தருகிறேன்" என்றார் தார்சிஸ். அந்த மாதப் பல்கலைக்கழகக் கட்டணத்தைச் செலுத்த தனக்கு 23 ரியால் தேவை என்பதை அவர் மறந்துவிட்டார்.

சில நாட்களுக்குப்பிறகு, தார்சிஸ் தனது பல்கலைக்கழகக் கட்டணத்திற்காகப் பணம் எடுக்க ஏடிஎம் வரிசையில் நின்றார். மாணவியாக இருந்த அவரது சகோதரியும் அவருடன் நின்றிருந்தார். அப்போதுதான், தசமபாகம் மற்றும் காணிக்கை போக மீதமிருந்த 40 ரியாலையும் தனது இரு நண்பர்களுக்குத் தருவதாக வாக்களித்தது அவருக்கு நினைவுக்கு வந்தது. அவர் தேவனிடம் பேசத் தொடங்கினார். "நான் ஏன் அந்த வாக்குறுதிகளை அளிக்க அனுதித்தீர்?" என்று வருத்தத்துடன் தலையைக் குனிந்தபடி கேட்டார். "நான் படிக்கவில்லை என்றால் மக்களுக்கு எப்படி உதவமுடியும்? அப்பா என்னிடம் என்ன சொல்வார்?" என்று கலங்கினார். அந்தத் தருணத்தில், "ஏடிஎம் இயந்திரத்தைப் பார்" என்று தேவன் தன்னிடம் சொல்வதை உணர்ந்தார். உள்ளே பார்த்தபோது, ஏடிஎம் இயந்திரத்தின் பணம் வெளிவரும் துவாரத்தில் பணம் ஒட்டிக்கொண்டிருப்பதைக் கண்டார். பிறகு ஒருவர் ஏடிஎம் இயந்திரத்தில் பணம் எடுக்க வந்தார், அதன்பிறகும் அந்தப் பணத்தாள் அங்கேயே இருந்தது. தார்சிஸால் அதை நம்ப முடியவில்லை. அவர், "ஆண்டவரே, வரிசையில் இருக்கும் அடுத்த மூன்று பேர் ஏடிஎம்–ஐப் பயன்படுத்தியும் அந்தப் பணத்தைக் கவனிக்கவில்லை என்றால், அது எனக்கானது என்று நான் அறிந்துகொள்வேன்" என வேண்டினார். வரிசையில் நின்றிருந்த அடுத்த மூன்று நபர்களும் பணம் எடுத்தனர், ஆனால் அந்தப் பணத்தாள் அங்கேயே இருந்தது. தார்சிஸ் ஜெபத்துடன் துணிச்சலாக வரிசையைத் தாண்டி ஏடிஎம் இயந்திரத்தை நோக்கிச் சென்றார். தனது கையை நீட்டி, அங்கிருந்த 50 ரியால் பணத்தாளை எடுத்தார். ஒரு நொடி பணம் ஏதும் இல்லாமல் இருந்த நிலை போய், அடுத்த நொடி அவர் கையில் பணமிருந்தது.

அடுத்த நொடியே அவரது சகோதரி அவர் அருகில் வந்து, "உனக்கு இந்தப் பணம் எங்கே கிடைத்தது?" என்று கேட்டார். "இங்கேதான், இது ஏடிஎம் இயந்திரத்தில் அப்படியே ஒட்டிக்கொண்டிருந்தது" என்று சொன்னார். "வாய்ப்பே இல்லை, அது அங்கேயே இருந்திருந்தால், நானே அதை எடுத்திருப்பேனே" என்று சொன்னார். இன்று, பிரேசிலின் ரெசிஃப் நகரில் 42 வயதான இராணுவக் காவல் அதிகாரியாக இருக்கும் தார்சிஸிடம், தேவன் ஏன் 50 ரியால்மட்டும் கொடுத்தார், அதற்கு மேல் ஏன் கொடுக்கவில்லை என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர், "ஏனென்றால் நான் அதற்கு மேல் மக்களுக்கு உதவவில்லை" என்று பதிலளிக்கிறார்.

